சுற்று நிருப இலக்கம் : 04/2017

கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழு (மே மா)
இலக்கம் : 109, நான்காம் மாடி,
பிரதான வீதி,
பத்தரமுல்ல.
2017.03.31

மேல் மாகாணத்தின் அனைத்து பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்,
மாவட்ட கிராமிய வங்கி ஒன்றியங்கள், சணச சங்கங்கள், மாவட்ட கூட்டுறவுச் சபைகள் மற்றும்
ஏனைய அனைத்து பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்க தலைவர்களுக்கும்,

**ஒழுக்காற்று விசாரணைகளின் போதான கொடுப்பனவு.**

கூட்டுறவு ஊழியர் சேவை ஏற்பாட்டுக் கோவையின் 5.10.1 முதல் 5.10.5 வரையான பிரிவுகளைத் திருத்தியமைத்து 5.10.6 முதல் 5.10.8 வரையான பிரிவுகளை புதிதாக உள்ளடக்கி வெளியிடப்பட்ட, கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவின் 05/2014 ஆம் இலக்க சுற்று நிருபத்தை செல்லுபடியற்றதாகச் செய்து, அச் சுற்று நிருபத்திற் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குப் பதிலாக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளைப் பிரதியீடு செய்வதை, மேல் மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழு அங்கீகரித்துள்ளது என்பதை ஆணைக் குழு நியதிகளிற்கு ஏற்ப இத்தால் அறிவிக்கிறேன்.

5.10.1 ஒழுக்காற்று விசாரணைகளை நடாத்துவதற்கு செலுத்தப்படும் கொடுப்பனவு 2017-03-01 ஆந் தேதியிலிருந்து கீழ்க் குறிப்பிட்டவாறு அமைதல் அவசியம்.

| | விசாரணைகள் நடைபெறும் மணித்தியாலம் ஒன்றுக்கான கொடுப்பனவு | இலிகிதர்/ தட்டெழுத்து உதவியாளர் தபால் கட்டணம் போன்றவற்றிற்றகாக செலவாகிய நிதியினை மீளளித்தல் | இறுதி அறிக்கையினை தயாரித்தல் |
|---|---|---|---|
| ஒழுக்காற்று விசாரணை அதிகாரி<br>ஓய்வு பெற்றவர் | ரூ.500 | ரூ.1500 | ரூ.5000 |
| அரச சேவையில்/ கூட்டுத்தாபன சேவையில் உள்ளோர் | ரூ.450 | ரூ.1500 | ரூ.5000 |
| உரிய சங்கத்தில் சேவையிலுள்ளோர் | ரூ.450 | - | ரூ.5000 |
| முறைப்பாட்டை வழிநடத்தும் அலுவலர் | ரூ.400 | - | ரூ.2500 |

5.10.1.1 கூட்டுறவுச் சங்கத்தினால் இலிகிதர் / தட்டெழுத்தாளர்களின் உதவி மற்றும் தபால் கட்டணங்கள் வழங்கப்படுமாயின் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தினைப் பெறுவதற்கு எவ்வித உரிமையுமில்லை.

5.10.1.2 ஒழுக்காற்று விசாரணையொன்று தொடர்பான செயற் குறிப்பு தட்டெழுத்துப் பிரதி தயாரிப்பதில் அல்லது கணனி மயப்படுத்துவதிலோ தட்டெழுத்தாளரிற்கு மணித்தியாலம் ஒன்றிற்கு 125 ரூபா கொடுப்பனவு செலுத்தப்படல் வேண்டும்

5.10.3 ஒழுக்காற்று விசாரணை /மேன் முறையீட்டு விசாரணை ஆகிய எந்தவொரு சந்தர்ப்பமாயினும் முறைப்பாட்டை வழிநடத்தும் அலுவலரிற்கு மேற்குறித்த பிரிவின் பிரகாரம் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.

5.10.4 மேற்குறித்த கொடுப்பனவிற்கு மேலதிகமாக மேன்முறையீட்டு விசாரணை அதிகாரி / ஒழுக்காற்று விசாரணை அதிகாரி / வழிநடத்தும் அதிகாரி அரச அல்லது கூட்டுத்தாபன சேவையின் ஓய்வு பெற்றவராயின் அவர் ஓய்வு பெற்ற வேளையில் வகித்த பதவியினை அடிப்படையாகக் கொண்டும், அரச அல்லது கூட்டுத்தாபன சேவையில் தற்போது கடமையில் ஈடுபட்டுள்ள அலுவலராயின் அவர் வகிக்கும் பதவியை அடிப்படையாகக் கொண்டும், அரச தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய பயணச் செலவு மற்றும் சங்யுக்த கொடுப்பனவைப் பெற்றுக் கொள்வதற்கு உரித்துண்டு. மேன் முறையீட்டு விசாரணை அலுவலர்/ முறைப்பாட்டை வழிநடத்தும் அலுவலர்/ ஒழுக்காற்று விசாரணை அலுவலர் கூட்டுறவுச் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற அலுவலர் ஒருவராயின் அவர் ஓய்வு பெறும் வேளையில் வகித்த பதவியினை அடிப்படையாகக் கொண்டும் , தற்போது கூட்டுறவுச் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகபூர்வ அலுவலர் ஒருவராயின் அவர் வகிக்கும் பதவியினை அடிப்படையாகக் கொண்டும், கூட்டுறவு ஊழியர் பணி ஏற்பாட்டுக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய பயணச் செலவும் இணைந்த படியினையும் பெற்றுக் கொள்வதற்கு உரித்துண்டு.

5.10.5 ஒழுக்காற்று விசாரணை அலுவலர் / முறைப்பாட்டை வழிநடத்தும் அலுவலர் விசாரணைக்காக தீர்மானிக்கப்பட்ட இடத்திற்கு தீர்மானிக்கப்பட்ட தினத்தில் தீர்மானிக்கப்பட்ட நேரத்திற்கு வருகைதந்த போதும் அவர் பொறுப்பேற்க அவசியமற்ற விஷேட காரணத்தினை அடிப்படையாகக் கொண்டு இவ் விசாரணையை வேறொரு தினத்திற்கு ஒத்திவைப்பாராயின் பூர்த்தியான அமர்விற்கு செலுத்தப்பட வேண்டிய தொகையின் ஒரு பகுதி அவரிற்கு செலுத்தப்படல் வேண்டும். பூர்த்தியான அமர்வு என்பதன் அர்த்தம் 8 மணித்தியால கால வரையரையாகும். எனினும் விசாரணையை 4 மணித்தியாலங்களிற்குக் குறைவான கால அளவு நடாத்தி வேறொரு தினத்திற்கு ஒத்திவைப்பதாயின் இச் சலுகை உரித்துடையதாகாது.

5.10.6 06 மாத காலத்தினுள் ஒழுக்காற்று விசாரணையை நிறைவு செய்து, இறுதி அறிக்கையினை ஒழுக்காற்று அதிகாரியிடம் ஒப்படைப்பதாயின், மேற்குறித்த
5.10.1 பந்தியில் குறிப்பிட்ட அனைத்து கொடுப்பனவுகளுக்கும் மேலாக, ரூபா 5000 கொடுப்பனவொன்றைப் பெற்றுக் கொள்வதற்கும் ஒழுக்காற்று விசாரணை அலுவலரிற்கு உரித்துண்டு.

5.10.7 ஏதாவதொரு விஷேட காரணத்தை அடிப்படையாகக் கொண்டு விசாரணை அறிக்கையினை சமர்ப்பிப்பதற்கு 06 மாதங்களிற்கு மேல் கால தாமதம் ஏற்படுமாயின் பணிப்பாளர் சபையின் பரிந்துரைக்கு ஏற்ப ஆணைக் குழுவின் எழுத்து மூல அனுமதியை அதற்காகப் பெற்றுக் கொண்டிருந்தால் அன்றி, ஒழுக்காற்று விசாரணை அலுவலரிற்கு மேலே 5.10.1 மற்றும் 5.10.6 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகளில் கீழ்க் குறிப்பிடப்படும் விதத்தில் குறைத்து செலுத்தப்படல் அவசியம்.

I. 06 மாதங்களிற்கு மேல் காலம் தாழ்த்தி சமர்ப்பிப்பதாயின் கொடுப்பனவில் 5%
II. 09 மாதங்களிற்கு மேல் காலம் தாழ்த்தி சமர்ப்பிப்பதாயின் கொடுப்பனவில் 10%
III. 12 மாதங்களிற்கு மேல் காலம் தாழ்த்தி சமர்ப்பிப்பதாயின் கொடுப்பனவில் 25%

ஆணைக்குழுவின் நியதிகளிற்கேற்ப,

எஸ்.ஏ.எல்.ரங்கனீ
செயலாளர்
கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக் குழு
மேல் மாகாணம்

பிரதிகள் :
01. பிரதான செயலாளர், மேல் மாகாணம்.
02. செயலாளர், கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு, மேல் மாகாணம்.
03. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்/ சங்கப் பதிவாளர், மேல் மாகாணம்.
04. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் - (கொழும்பு/கம்பஹா/களுத்துறை)
05. பணிப்பாளர், மேல் மாகாண கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய திட்டம்.
06. செயலாளர், மத்திய அரசின் கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழு.
07. அனைத்து மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுச் செயலாளர்கள்.
08. அனைத்து தொழிற் சங்கங்கள் ஒன்றியங்கள்